# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# பத்தாம் பத்து

## இரண்டாம் திருவாய்மொழி - கெடுமிடர்
## திருவனந்தபுரத்தைச் சேர்ந்தால் பரமபதத்திற் போலக் கைங்கர்யம் செய்யலாம் என்று பரோபதேசம் செய்தல்

** கெடும் இடர் ஆய எல்லாம் * கேசவா என்ன * நாளும்
கொடு வினை செய்யும் * கூற்றின் தமர்களும் குறுக கில்லார் **
விடம் உடை அரவில் பள்ளி * விரும்பினான் சுரும்பு அலற்றும் *
தடம் உடை வயல் * அனந்தபுர நகர்ப் புகுதும் இன்றே 1

இன்று போய்ப் புகுதிர் ஆகில் * எழுமையும் ஏதம் சார *
குன்று நேர் மாட மாடே * குருந்து சேர் செருந்தி புன்னை **
மன்று அலர் பொழில் * அனந்தபுர நகர் மாயன் நாமம் *
ஒன்றும் ஓர் ஆயிரமாம் * உள்ளுவார்க்கு உம்பர் ஊரே 2

ஊரும் புட்கொடியும் அஃதே * உலகு எல்லாம் உண்டு உமிழ்ந்தான் *
சேரும் தண் அனந்தபுரம் * சிக்கெனப் புகுதிர் ஆகில் **
தீரும் நோய் வினைகள் எல்லாம் * திண்ணம் நாம் அறியச் சொன்னோம் *
பேரும் ஓர் ஆயிரத்துள் * ஒன்று நீர் பேசுமினே 3

பேசுமின் கூசம் இன்றிப் * பெரிய நீர் வேலை சூழ்ந்து *
வாசமே கமழும் சோலை * வயல் அணி அனந்தபுரம் **
நேசம் செய்து உறைகின்றானை * நெறிமையால் மலர்கள் தூவி *
பூசனை செய்கின்றார்கள் * புண்ணியம் செய்த ஆறே! 4

புண்ணியம் செய்து * நல்ல புனலொடு மலர்கள் தூவி *
எண்ணுமின் எந்தை நாமம் * இப்பிறப்பு அறுக்கும் அப்பால் **
திண்ண நாம் அறியச் சொன்னோம் * செறி பொழில் அனந்தபுரத்து *
அண்ணலார் கமல பாதம் * அணுகுவார் அமரர் ஆவார் 5

அமரராய்த் திரிகின்றார்கட்கு * ஆதி சேர் அனந்தபுரத்து *
அமரர் கோன் அர்ச்சிக்கின்று * அங்கு அகப் பணி செய்வர் விண்ணோர் **
நமர்களோ! சொல்லக் கேண்மின் * நாமும் போய் நணுக வேண்டும் *
குமரனார் தாதை துன்பம் * துடைத்த கோவிந்தனாரே 6

துடைத்த கோவிந்தனாரே * உலகு உயிர் தேவும் மற்றும் *
படைத்த எம் பரம மூர்த்தி * பாம்பணைப் பள்ளி கொண்டான் **
மடைத் தலை வாளை பாயும் * வயல் அணி அனந்தபுரம் *
கடைத்தலை சீய்க்கப் பெற்றால் * கடு வினை களையலாமே 7

கடு வினை களையல் ஆகும் * காமனைப் பயந்த காளை *
இடவகை கொண்டது என்பர் * எழில் அணி அனந்தபுரம் **
படம் உடை அரவில் பள்ளி * பயின்றவன் பாதம் காண *
நடமினோ நமர்கள் உள்ளீர்! * நாம் உமக்கு அறியச் சொன்னோம் 8

நாம் உமக்கு அறியச் சொன்ன * நாள்களும் நணிய ஆன *
சேமம் நன்கு உடைத்துக் கண்டீர் * செறி பொழில் அனந்தபுரம் **
தூம நல் விரை மலர்கள் * துவள் அற ஆய்ந்து கொண்டு *
வாமனன் அடிக்கு என்று ஏத்த * மாய்ந்து அறும் வினைகள் தாமே 9

மாய்ந்து அறும் வினைகள் தாமே * மாதவா! என்ன * நாளும்
ஏய்ந்த பொன் மதிள் * அனந்தபுர நகர் எந்தைக்கு என்று **
சாந்தொடு விளக்கம் தூபம் * தாமரை மலர்கள் நல்ல *
ஆய்ந்து கொண்டு ஏத்த வல்லார் * அந்தமில் புகழினாரே 10

** அந்தமில் புகழ் * அனந்தபுர நகர் ஆதி தன்னை *
கொந்தலர் பொழில் * குருகூர் மாறன் சொல் ஆயிரத்துள் **
ஐந்தினோடு ஐந்தும் வல்லார் * அணைவர் போய் அமர் உலகில் *
பைந்தொடி மடந்தையர் தம் * வேய் மரு தோள் இணையே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---